வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,
ந.க.எண்.4835/ஆ3/2022 நாள் :16.02.2023.

-----

பொருள் : ஆதிதிராவிடர் நலம் – கல்வி உதவித்தொகை போஸ்ட் மெட்ரிக், பிரிமெட்ரிக் (IX–X) மற்றும் சுகாதார தொழில்புரிவோரின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை திட்டம் புதிய இணை பயன்பாட்டு வழி செயல்படுத்துதல் சார்பு.

பார்வை : வேலூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் கடித ந.க.எண்.கே6/1898/2023 நாள்.10.02.2023.

-----

வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு / அரசு உதவி பெறும் உயர்/மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கான 2022–2023 ஆம் கல்வி ஆண்டு முதல் போஸ்ட் மெட்ரிக் மற்றும் பிரிமெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் உதவித்தொகை விண்ணப்பிக்க மாணவர்களுக்கு ஆதார் எண் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேலும் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட வங்கி கணக்கிற்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும் (Aadhar based Payment) என பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மாணவர்களின் ஆதார் எண்ணை வங்கி கணக்குடன் இணைக்கப்பட வேண்டும் மற்றும் வங்கி கணக்கு எண் செயல்பாட்டில் இருக்க வேண்டும் எனவும் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட கைபேசியும் செயல்பாட்டில் இருக்க வேண்டும்.

ஏனெனில் மாணவர்கள் கல்வி உதவித் தொகைக்கான இணையதளத்தில் விண்ணப்பிக்கும் போது கைபேசிக்கு OTP வரும். ஆகையினால் மாணாக்கர்கள் கீழ்காணும் ஆவணங்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

- ஆதார் எண்
- ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட அலைபேசி
- மாணவருடைய மின்னஞ்சல் முகவரி
- தொடர்புடைய தொலைபேசி எண்
- ONLINE சாதி சான்றிதழ்
- ONLINE வருமான சான்றிதழ்
- 12 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்
- ஆதாருடன் இணைக்கப்பட்ட வங்கி கணக்கு.

மேற்காண் ஆவணங்களை தயார் நிலையில் வைத்திருக்க அரசு / அரசு உதவிபெறும் உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஒம்/– க.முனுசாமி)
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர் – 9.

**பெறுநர்**

1. அரசு / அரசு உதவிபெறும் உயர் / மேல்நிலை தலைமை ஆசிரியர்கள் (வேலூர் மாவட்டம்).

**நகல்**

1. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலைக் கல்வி), வேலூர் (தொடர்நடவடிக்கையின் பொருட்டு).
2. வேலூர் மாவட்ட ஆதிதிராவிடர் (மற்றும்) பழங்குடியினர் நல அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.